பக்கங்கள் 14+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 29 செவ்வாய்க்கிழமை 11.02.2025 | அதிர்வு 194

## நாளை மின்வெட்டு இல்லை

நாட்டில் நாளை புதன்கிழமை மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என்று இலங்கை மின்சார சபை

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### விகாரையை உடனடியாக அகற்றக் கோரியும் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும்

# தையிட்டியில் போராட்டம் ஆரம்பம்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரைக்கட்டுமானத்தை உடனடியாக அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியும், சட்டவிரோதமாகக் கையகப்படுத்தப்பட்ட காணிகளை உரிமையாளர்களிடம் உடனடியாகக் கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியும் இன்று மாலை 4 மணிக்குக் கவனயீர்ப்புப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

04

# தோழர் அநுரகுமார உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவரா?

## இப்படி சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாகத் தனியார் காணியில் கட்டப்பட்ட புத்த கோயிலை இடிக்க முடியாது என்று அநுர அரசு தெரிவித்துள்ள கருத்துக்குக் கண்டனம் வெளியிட்டுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன், தமிழர் பகுதிகளில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்தமயமாக்கல், சிங்களமயமாக்கல் திட்டங்களை நிறுத்தும்படியும் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

"2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சிங்கள மக்களோ பௌத்த மக்களோ வாழாத இடங்களில் இலங்கை அரசும் பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரை முன்னிறுத்தி புதிய பௌத்த ஆலயங்களைக் கட்டத் தொடங்கினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சிங்கள பௌத்த மயமாக்குதலே அதனுடைய பாரிய நோக்கமாக இருந்தது. அந்தவகையில் வடக்கு மாகாணத்தின் பல்வேறுபட்ட இடங்களில் புத்த கோயில்கள் உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நாவற்குழி, மன்னாரில் திருக்கேதீஸ்வரம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்தகைய புதிய பௌத்த ஆலயங்கள் உருவாக்கப்பட்டன.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலும் புதிய புதிய பௌத்த ஆலயங்கள் இன்றும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு என்பது தமிழ் மக்களின் தாயகம் என்பதை இல்லாமல் செய்வதற்கும் இந்த சிங்கள பௌத்தமயமாக்கல் என்பது அரசுக்குத் தேவையாக இருந்தது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் பலாலி, தையிட்டியிலும் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகளைப் பலாத்காரமாகக் கையகப்படுத்தி அங்கு ஒரு பாரிய புத்த கோயிலை நிறுவியிருக்கின்றனர்.

இந்த புத்த கோயில் கட்ட ஆரம்பிக்கின்றபோது யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுவானது தனியார் காணிகளைப் பலாத்காரமாகக் கையகப்படுத்தியது சட்டவிரோதமானது என்றும், எந்தவிதமான அனுமதிகளும் பெற்றுக்கொள்ளப்படாமல் புத்த கோயில் கட்டுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், அந்தச் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஆரம்பத்திலேயே வலியுறுத்தியிருந்தபோதிலும்கூட அது எந்தவிதத்திலும் கவனத்தில் எடுக்கப்படாமல் இப்போது அந்தப் புத்த கோயில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இப்போது புதிதாகப் பதவியேற்றுள்ள இடதுசாரி அரசானது சாதி, மத, இன பேதங்களற்ற சமத்துவமான இலங்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனப் பேசி வருகின்றது. ஆனால், வடக்கு - கிழக்கில் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி சட்டவிரோதமாக உருவாக்கப்பட்டு வரும் பௌத்த ஆலயங்கள் தொடர்பாக இன்னும் வாய்மூடி மௌனியாகவே இந்த அரசு இருந்து வருகின்றது.

யுத்த காலத்தில் உருவாக்கப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருந்த பல்வேறுபட்ட சைவ, கிறிஸ்தவ ஆலயங்கள் எந்தவிதக் கேட்டுக்கேள்வியும் இல்லாமல் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. இதேபோன்று தென் பகுதியிலும்கூட பள்ளிவாசல்களும் சைவக் கோயில்களும் இடிக்கப்பட்டுள்ளன. ஆனால், இப்போது தையிட்டியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோதமான ஒரு பௌத்த ஆலயம் எக்காரணம் கொண்டும் இடிக்கப்படமாட்டாது என்று அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான இடதுசாரி அரசும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது.

இது சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம், ஏனைய மக்களுக்கு ஒரு சட்டம் என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. சாதி, மத, மொழி, இன பேதமற்ற ஓர் இலங்கையை உருவாக்க வேண்டும் என இப்போது உள்ள புதிய அரசு உண்மையிலேயே விரும்புமாக இருந்தால், வடக்கு - கிழக்கு எங்கும் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து பௌத்த ஆலயங்களின் கட்டுமானப் பணிகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

சிங்கள மக்களோ பௌத்தர்களோ இல்லாத இடங்களில் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த பௌத்த ஆலயங்கள் தொடர்பாக அரசு தெளிவான முடிவுக்கு வரவேண்டும்.

தன்னை ஓர் இனவாதியோ, மதவாதியோ அல்ல என்று காட்ட முயற்சிக்கும் அநுர அரசானது நடைமுறையில் இனவாதத்தையும் மதவாதத்தையும் முன்னிலைப்படுத்துவதை முழுமையாக உடனடியாகக் கைவிட வேண்டும்.

தையிட்டி புத்த கோயில் நிர்மாணம் என்பது ஒரு குறியீடு மட்டுமே. ஆகவே, இதற்கு எதிரான கடுமையான கண்டனத்தை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பதிவு செய்வதுடன் இதற்காக மக்கள் முன்னெடுக்கும் அனைத்து போராட்டங்களுக்கும் ஆதரவளிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அநுர அரசு மாற்றத்தை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையில் அந்தக் கட்சியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் சிலரை தமிழ் மக்கள் வாக்களித்து தெரிவு செய்திருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பிரதிநிதிகள் தமது மக்கள் நலன்சார்ந்து அவர்கள் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் இவ்வாறான சட்டவிரோத செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்க முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்." - என்றுள்ளது.

# மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொளுத்திய வன்முறைக் கும்பல்



யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் உள்ள வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வன்முறைக் கும்பலால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிளின் உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# இழப்பீடு பெற்றுள்ள முன்னாள் எம்.பிக்களின் சொத்துகள் குறித்து விசாரணை நடத்தப்படும்

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

இழப்பீடு பெற்றுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் சொத்துகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இழப்பீடு பெற்றுள்ள அரசியல்வாதிகளுள் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியர்களின் பெயர்ப்பட்டியலை மட்டுமே தற்போது வெளியிட்டுள்ளோம். பிரதேச அரசியல்வாதிகளின் பெயர்களும் உள்ளன. அதுவும் வெளியிடப்படும்.

அதிகாரிகளை மிரட்டி இருக்கின்ற சொத்துக்களை விடவும் இழப்பீடு பெறப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து விவரங்களை வெளியிட்டிருக்க வேண்டும். எனவே, அது பற்றி நிச்சயம் விசாரணை நடத்தப்படும்.

சி.ஐ.டியினர் மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணைக் குழு என்பனவும் இது பற்றி விசாரணை நடத்தும் என நம்புகின்றோம்.

களவாடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறுவதற்கும், முறைகேடாக இழப்பீடு பெற்றிருந்தால் அதனை மீளப்பெறுவதற்கும் சட்ட திருத்தங்கள் அவசியமெனில் அதனைச் செய்வதற்கும் தயாராகவே இருக்கின்றோம்." - என்றார்.






# வவுனியாவில் ஆணின் சடலம் மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியா, பசார் வீதியில் உள்ள கடைத் தொகுதியில் இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பசார் வீதியில் உள்ள மாடிக் கட்டடத் தொகுதியின் கீழ் பகுதியிலேயே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கடைத் தொகுதியின் மாடியில் தங்கியிருந்தவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



வவுனியா, சாந்தசோலை பகுதியைச் சேர்ந்த பசுப்பையா ஆனந்தன் (வயது 40) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி நபர் மாடியில் இருந்து கீழே வீழ்ந்து மரணமடைந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எனினும், இது கொலையா அல்லது விபத்தா எனத் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**தையிட்டியில்...**

தையிட்டி விகாரைக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டம் பௌர்ணமி தினமாகிய நாளை புதன் கிழமை மாலை 6 மணி வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்துக்குப் பல கட்சிகளும் பேதங்களின்றி ஆதரவு வழங்கியுள்ளன.

எனவே, தமிழ் மக்கள், தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரையும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு வலுச்சேர்க்குமாறு தையிட்டி விகாரை காணி உரிமையாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.





**நாளை மின்வெட்டு...**

தெரிவித்துள்ளது.

மின்வெட்டைத் தொடர்ந்தும் அமுல்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்காக இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து நாளை மின்வெட்டை அமுல்படுத்துவதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் நாட்களில் மின்வெட்டை அமுல்படுத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது

இதேவேளை இன்று மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நேரங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தேவையேற்படின் மின்சார விநியோகத் தடை அமலபடுத்தப்படும் நேரம் 30 நிமிடங்களால் மாறுபடலாம் என்றும் இலங்கை மின்சார சபை குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி R, S, T, W ஆகிய வலயங்களில் பிற்பகல் 3.30 முதல் 4 மணிக்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு 5 மணி முதல் 5.30 வரையான காலப் பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

A, B, C, D, P, Q ஆகிய வலயங்களில் மாலை 5 மணி முதல் 5.30க்குள் மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு மாலை 6.30 முதல் 7 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

E, F, G, H, U, V ஆகிய வலயங்களில் மாலை 6.30 முதல் 7 மணி வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 8 மணி முதல் 8.30 வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும்.

I, J, K, L ஆகிய வலயங்களில் இரவு 8 மணி முதல் 8.30 வரை மின் விநியோகத் தடை அமுலாக்கப்பட்டு இரவு 9.30 முதல் 10 மணி வரையான காலப்பகுதிக்குள் மீளிணைக்கப்படும் என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட திடீர் மின் தடையைத் தொடர்ந்து, நுரைச்சோலை மின் நிலையத்தில் உள்ள 3 மின்மாற்றிகள் செயலிழந்ததால், மின்சார தேவையை நிர்வகிக்கும் பொருட்டு, இலங்கை மின்சார சபை நேற்றும் இன்றும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் ஒன்றரை மணி நேரம் மின் விநியோகத்தை தடை செய்ய முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இ.தொ.கா. முக்கியஸ்தர்கள் இந்தியத் தூதருடன் சந்திப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள், இலங்கைகக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கொழும்பில் அமைந்துள்ள இந்தியன் இல்லத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இ.தொ.காவின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளரும் நிதிச் செயலாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் ஆகியோர் இந்தியத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

குறிப்பாக இந்தச் சந்திப்பின்போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினர்களுக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டது.

அதாவது மலையக மக்களுக்கான காணி உரிமை தொடர்பிலும், இந்திய அரசின் நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளுக்கான காணி உரித்தைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இந்திய அரசின் உதவின் கீழ் மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை (வித்தியாவர்தன) வழங்கி ஆசிரியர்களுக்கான அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கிலம், கணிதம் ஆகிய துறைகளில் புலமையை அதிகரித்துக் கொள்வதற்காக உதவி வழங்கியையைமைக்காக இந்திய அரசுக்கு நன்றிகளையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

அதேபோல் பெருந்தோட்ட பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஜீவன் தொண்டமான், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலப்பகுதியில் இந்திய அரசிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்திய அரசால் வழங்கப்பட்ட 3 பில்லியன் ரூபா நிதி உதவிக்கான அபிவிருத்தி முன்மொழிவுகளை தற்போதைய அரசினூடாக மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டதுக்கிணங்க கடந்த வருடம் இலங்கை பொருளாதார நெருக்கடியில் காணப்பட்டபோதும், சமீபத்திய வளர்ச்சிக்காகவும் வழங்கிய ஆதரவுக்கும் இந்திய அரசுக்கு நன்றிகளையும் அவர்கள் தெரிவித்துக்கொண்டனர்.

# கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் கும்பலின் தலைவரின் சகாவே பலி

கொழும்பு, கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெனடிக் மாவத்தைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பெனடிக் மாவத்தை பகுதியில் நேற்று இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், வீதியில் இருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு13,ஜம்பட்டாவீதியில்வசித்து வந்த 43 வயதுடைய நபரே உயிரிழந்தார்.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், சந்தேகநபர்கள் இருவரும் ரி – 56 ரக துப்பாக்கியைப் பயன்படுத்தி இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பெனடிக்ட் மாவத்தை பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் பாதாள உலகக் கும்பலின் தலைவரான "பலனி ஷிரான் குலோரியன்" என்பவரின் சகாக்களால் மேற்கொளளப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரருமான "புகுடுகன்னா" பாலசந்துன் புஷ்பராஜ் ஹேவத் என்பவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்துள்ளார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**நமது கருத்து**

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அமெ. பல்டியின் விளைவு

சர்வதேச விவகாரங்களைக் கையாளும் அரசியல் நகர்வு தொடர்பான விடயங்களில் ஒருமைப்பட்ட - நிலையான - ஸ்திரமான - உறுதியான - கொள்கை கொண்ட நாடு என்ற தகைமையை இழந்து வருகிறது அமெரிக்கா. ஆட்சி மாறும்போது, சர்வதேச ராஜதந்திரத் தொடர்பாடல்கள், அணுகுமுறைகள் போன்றவை தொடர்பான நிலைப்பாட்டிலும் தலைகீழான மாற்றங்களை காட்டும் ஒரு நிலையற்ற கொள்கை கொண்ட ஒரு நாடாக அமெரிக்கா தன்னைத் தானாகவே அடையாளப்படுத்தி வருகின்றது.

ஆட்சித் தரப்புகள் மாறும்போது, ராஜதந்திர அணுகுமுறை நிலைப்பாடுகளும் தலைகீழாக - எதிரும் புதிருமாக - மாறுகின்ற சின்னத்தனமான போக்கை அமெரிக்கா அப்பட்டமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் விடயங்களை கையாளும் முக்கிய தரப்பாக உள்ளது ஜெனிவாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில்.

டொனால்ட் டிரம்ப ஆட்சிக்கு வந்ததும் அந்த சபையில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதும், மறுதரப்பு அதிகாரத்தைக் கைப்பற்றியதும் அதில் முழுமுனைப்பாக இணைந்து கொள்வதுமாக மாறி மாறி அந்தர் பல்டி அடிக்கிறது அமெரிக்கா.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் விடயம் என்று மட்டுமல்ல, பல்வேறு சர்வதேச அரசியல் அணுகுமுறைகளில் நிலையான நிலைப்பாடு எடுக்காத குத்துக்கரண நாடு அமெரிக்கா என்ற பெயரை அது செயல் ரீதியாகத் தானாகவே நிரூபித்து வருகிறது.

இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதன் உறுப்புரிமையிலிருந்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்கா வெளியேறுமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவின் வெளியேற்றம், கவுன்ஸில் இலங்கை தொடர்பாக எடுத்து வரும் நடவடிக்கைகளில் மாற்றத்தைக் கொண்டு வருமா என்று கேள்வி எழுந்துள்ளது. இது, இலங்கை விவகாரத்தில் தோற்றுவிக்கக் கூடிய சாதக, பாதக நிலைமைகள் தொடர்பில் பலரும் மாறுபட்ட கருத்துக்களை முன்வைத்துவருகின்றனர்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் தவிசாளர் கலாநிதி பிரதிபா மஹாநாமஹேவா, அமெரிக்கா எதிர்வரும் 58 ஆவது அமர்வில் வெளியேறவுள்ளதால் இலங்கைக்குப் பெரும் சாதகநிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், “ஏற்கனவே டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தின்கீழ் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலிலிருந்து அமெரிக்கா விலகியது, அப்போது இலங்கை பற்றிய தீர்மானத்துடன் தொடர்புடைய நகர்வுகளை பிரிட்டன் தலைமைத்துவம் வழங்கி தடையின்றி முன்னெடுத்துச் சென்றது.’’ - எனச் சுட்டிக் காட்டுகின்றார் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

எனவே இம்முறை மீண்டும் அமெரிக்கா விலகும் பட்சத்தில், இலங்கை தொடர்பான நகர்வுகளை பிரிட்டன் உள்ளிட்ட ஏனைய இணை அனுசரணை நாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் எனவும், அதில் பின்னடைவு ஏற்படும் என்று தான் கருதவில்லை எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

அதேவேளை ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலிலிருந்து அமெரிக்கா விலகுவதால் இலங்கை விவகாரத்தில் குறிப்பிடத்தக்க பாரிய மாற்றங்கள் எவையும் ஏற்படா எனக் குறிப்பிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஆனால், இலங்கை தொடர்பான தீர்மானத்தைத் தாம் நிராகரிப்பதை அமெரிக்கா விலகுவதைக் காரணங்காட்டி இலங்கை அரசாங்கம் நியாயப்படுத்தக் கூடும் என விசனம் வெளியிட்டார்.





# பெண் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான கலந்துரையாடல்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண் தொழில் முயற்சி யாளர்களை ஊக்குவிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலகத்தில இடம்பெற்றது.

கிரிசலிஸ் நிறுவனத்தின் பங்களிப்புடன் சமூக நல்லி ணக்கம், சமாதானம், பொருளாதாரத்தை வலுவடைய செய் வதனை நோக்காகக் கொண்டு மாவட்டத்தில் நடை முறைப்படுத்தப்படவுள்ளது.


மண்முனை வடக்கு பிரதேச செயலகம், கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகம் மற்றும் கிரான் பிரதேச செயலக பிரிவுகளில் இந்தத் திட்டம் ஆரம்பக் கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குமான செயற்றிட்டத்தை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தப் பிரதேசத்தில் வாழும் தெரிவு செய்யப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் சமூக அபிவிருத்தியை மேற்கொள்வதற்கும் இதன்போது உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கை பெண்கள் பணியக பணிப்பாளர் சஜிவினி பேரோரா, ஐக்கிய நாடுகள் பெண்கள் நிறுவன பணிப்பாளர் சனோன், சிறுவர் நன்னடத்தை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அருணாளினி சந்திரசேகரம், திட்டமுகாமையாளர் ஜெகதீபன், சிரேஷ்ட திட்ட உத்தியோகத்தர் ஜவாகிர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# போக்குவரத்து தடைப்பட்டுக் காணப்படும் காப்பெட் வீதி தொடர்பில் அசமந்தம்!

## விசனம் தெரிவிக்கின்றனர் மக்கள்

(எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை- அக்கரைப்பற்று பிரதேசங்களை இணைக்கும் கோணாவத்தை ஆற்றங்கரை பிரதான காப்பெட் வீதி கடந்த மூன்று மாத காலமாகச் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தினமும் பயன்படுத்தும் பாதையாகவும் இவ்வீதி அமைகின்றது. இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளனர் என்று பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



கோணாவத்தை ஆறு மற்றும் கடற்கரையை அண்டிய பகுதியில் இவ்வீதி அமையப் பெற்றுள்ளதால் மீன்பிடித் தொழிலாளர்கள் இப்பாதையைப் பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக இவ்வீதி உடைப்பெடுத்தமையால் சிறியளவில் சிதைவடைந்து காணப்பட்டது. சிதைவடைந்த இவ்வீதியை மக்கள் சிரமத்துடன் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தி வந்தனர்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் மீண்டும் பெய்த அடைமழை காரணமாக மக்கள் குடியிருப்புகளுக்குள் வெள்ள நீர் நிறைந்திருந்து காணப்பட்டது.

வெள்ள நீரை அப்புறப் படுத்தும் வகையில் குறித்த இவ்வீதி அட்டாளைச்சேனை பிரதேச சபை மூலம் கனரக வாகனத்தின் உதவியுடன் உடைக்கப்பட்டு ஆற்றுப் பகுதிக்குள் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டது. இவ்வாறு உடைக்கப்பட்ட இவ்வீதி ஒரு மாத காலத்துக்கும் மேலாகச் சீர் செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

மழை காலங்களில் நிரம்பும் வெள்ள நீரை அகற்றும் வகையில் முறையான திட்டமிடலின்றியும், போதியவிலான வடிகான்கள் இன்றியும் இவ்வீதி காபட் வீதியாக நிர்மாணிக்கப்பட்டது.

மழை காலங்களில் தொடர்ச்சியாக இவ்வீதி உடைப்பெடுக்கிறது பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிதைவடைந்து காணப்படும் இவ்வீதி இரவு வேளைகளில் இருள் சூழ்ந்து காணப்படுவால் பல்வேறு விபத்துச் சம்பவங்களும் இடம்பெறுவதோடு, பொது மக்கள், மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள் போன்றோர் இப்பாதையைப் பயன்படுத்துவதில் பல்வேறான சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

துறைசார் அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு குறித்த இந்த வீதியை மக்கள் போக்குவரத்துக்காகாதட தயார் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



### சந்தான்கேணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற

# தீ வைப்பு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைக்குக் குழு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட சந்தான்கேணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தீ வைப்பு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட குழு ஆரம்பித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) முதல் லெஜன்ஸ் கிரிக்கெட் 7 என்ற பெயரில் கடின பந்து சுற்றுப் போட்டியை நடத்தும் லெஜன்ஸ் விளையாட்டு கழகத்துக்குச் சொந்தமான மைதான ஆடுகள விரிப்பு இனந்தெரியாத நபர்களால் எரியூட்டப்பட்டுள்ளது.

லெஜன்ஸ் கழகம் சார்பாக அதன் செயலாளரால் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய கல்முனை பொலிஸ் நிலையப் பொலிஸாரும் அம்பாறையில் இருந்து தடயவியல் பொலிஸ் பிரிவினரும் (SOCO) வரவழைக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எரியூட்டப்பட்ட மைதான ஆடுகள விரிப்பின் பெறுமதி ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது மைதானத்தில் கடமையாற்றும் காவலாளி கடமையில் இல்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இதே போன்ற சம்பவம் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பும் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.





# மன்னார் மாவட்ட பொங்கல் விழா; 108 பானைகளில் பொங்கல்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் வேட்டையா முறிப்பு அருள்மிகு ஆதி விநாயகர் ஆலயம் இணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட பொங்கல் விழா நிகழ்வு வேட்டையா முறிப்பு விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர் அ.தனுஜன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், நானாட்டான் பிரதேச செயலாளர் கே.சிவசம்பு ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்களும் கலந்து கொண்டனர்.

பொங்கல் பண்பாட்டு பேரணி இடம்பெற்று அதனைத தொடர்ந்து மங்கள வாத்திய இசையுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து சம்பிரதாய முறையில் 108 பானைகளில் பொங்கல் பொங்கி கும்மி நடனம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் நிகழ்வுகள் இடம்பெற்றன.





# கண்ணப்ப நாயனார் குருபூசை

(க.மகாதேவன்)

புத்தளம், உடப்பு கிராமத்திலுள்ள ஸ்ரீ கோகுலம், இந்து நெறிக்கழக அறநெறிப் பாட சாலையில் ஞாயிற்றுக்கிழமை கண்ணப்ப நாய னார் குருபூசை நடைபெற்றது.

இதன் போது காலை வேளையில் அறநெறிப் பாடசாலை வகுப்புக்கள் முடிவடைந்த பின்னர் மாணவர்கள், உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌ பதியம்மன் ஆலய உள் வீதி, வெளி வீதியை சுற்றி வந்ததுடன் மீண்டும் அறநெறி வகுப்பில் கலந்து கொண்டனர்.

இதில் இந்து நெறிக்கழகத் தலைவர் பா.முருகானந்தன் கலந்து கொண்டு வழி நடத்தினார்.





# சமூகங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு பாதகம் ஏற்படும் விதத்தில கருத்துக்கள் அமையக் கூடாது!

## ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் தெரிவிப்பு



(பழுவூரான்)

சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவுக்குப் பாதிப்பு ஏற்படும் விதத்திலான கருத்துக்கள் தெரிவிப்பதை பொறுப்பு வாய்ந்தவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு இருக்கின்ற சிறப்புரிமையின் அடிப்படையில் நாடாளுமன்ற விவாதங்களின் போது பல்வேறு கருத்துக்களை முன்வைத்து உரையாற்றுவது வழமை.

இந்தவகையில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் – இராமநாதன் அர்ச்சுனா ஆகிய இருவருக்கிடைலான கருத்து மோதலை நாடாளுமன்றத்துக்கு வெளியே கொண்டு வந்து ஒரு சமூகத்தை இழிவுபடுத்தும் வகையில் கருத்து தெரிவித்து அதை சமூக மயப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் செயல் மிகவும் கண்டனதுக்கு உரியதாகும். இது ஈழத் தமிழர்களதும் மலையகத் தமிழர்களதும் உறவு நிலையில் விரிசலை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்து விடலாம்.

இவ்வாறு ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தனது ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிப்புக்கு காரணமாக இருந்த சட்டத்துக்கு வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தமையால் இரு சமூகங்களும் மிக நீண்ட காலமாக பகை முரண்பாடுகளுடன் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தந்தை செல்வா போன்ற வடக்கு தலைவர்களின் அரசியல் செயற்பாடுகளே இரண்டு சமூகங்களுக்கிடையிலான விரிசலை ஒரளவு குறைத்திருந்தது. 1980 களுக்கு பின் வடக்கு – கிழக்கு தலைமை இளைஞர்களின் கைகளுக்கு மாறியபோது பிரதேசவாதம் வலுவிழந்தது. ஈரோஸ் அமைப்பின் நிறுவுனர் தோழர் இரட்னசபாபதியின் தீர்க்கதரிசினமான பார்வை போராட்டத்தில் மலையகத்தையும் இணைத்துக் கொண்டபோது மலையகத் தமிழர்களும் போராட்டத்தில் பங்காளியானார்கள்.

இறுதி யுத்ததில் மலையகத்தில் இருந்து வடக்கு நோக்கி இடம்பெயர்ந்திருந்த மலையகத் தமிழர் இறுதிவரை போராட்டக் களத்தில் நின்றதை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா போன்றவர்கள் மறந்து விடக்கூடாது.

அமைச்சரோடு பிரச்சினை என்றால் அவரோடு விவாதித்துக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து “கப்பலில் வந்தவர்” என்று அவர் சார்ந்த சமூகத்தை இழிவுபடுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

200 வருடங்களுக்கு முன் கப்பலில் வந்தவர்கள்தான் இன்றுவரை இந்த நாட்டை பொருளாதார ரீதியாக தாங்கி பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் கப்பலில் வந்த மலையகத் தமிழர்களின் உழைப்பில்தான் நாட்டிலுள்ள மிக அதிகமான மக்கள் இலவசக் கல்வி, இலவச மருத்துவத்தை அனுபவித்தனர். அதில் சிலநேரம் ஒரு சமூகத்தை இழிவுபடுத்த எத்தனிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவும் உள்ளடங்கியிருக்கலாம் .

அத்தோடு இன்று புலம்பெயர்ந்து வாழும் வட– கிழக்கு சமூகம் மலையக கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறார்கள். எதிர்காலத்தில் பல்வேறு வகையான உதவிகளை செய்யத் தயாராகவுள்ளனர்.

இந்த நிலையில் சமூகங்களுக்கு இடையே பிரச்சினைகளை ஏற்படுத்தும் சூழ்ச்சியில் மலையக இளம் தலைமுறையினர் விழுந்து விடக்கூடாது.

சமூக ஊடகங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்குப் பதில் சொல்வதாக நினைத்து அவர் சார்ந்த சமூகத்தை நீங்கள் இழிவுப்படுத்தி விடக்கூடாது. அவருக்கான பதிலை ஈழத்தமிழர்களே வழங்கவேண்டும்.

அதுவே இரு சமூகங்களுக்கிடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவதாக அமையும்.– என்றுள்ளது.

# கிழக்கு மாகாணத்தின் பதில் பிரதி பிரதம செயலாளராக கோபாலரத்தினம்!

(வி.ரி.சகாதேவராஜா, அபு அலா)

கிழக்கு மாகாண பதில் பிரதிப் பிரதம செயலாளராக கலாநிதி மூ.கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர இந்த நியமனத்தை நேற்று (10) வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் மேற்கொண்ட அதிரடி உயர் நிர்வாக மாற்றத்தில் ஓரங்கமாக இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான இவர், தற்போது கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளராக கடமை புரிந்து வருகின்றார். அதற்கு மேலதிகமாக இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு முன்னர் திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராகச் சேவையாற்றியிருந்தார்.

மட்டக்களப்பு செட்டிபாளையத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மூத்ததம்பி செல்லம்மா தம்பதியினரின் புதல்வராவார். தற்போது கல்முனையில் வசித்து வருகிறார்.





# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு!

## ரவிகரன் எம்.பியின் தொடர் செயற்பாடு

(விஜயத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்கள் குறைகேள் சந்திப்புக்களை நடத்தி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், அவர்களது குறைபாடுகளையும் கேட்டறிந்து வருகிறார்.

குறிப்பாக வள்ளுவர்புரம், இளங்கோபுரம், பாரதிபுரம், மூங்கிலாறு, வெள்ளப்பள்ளம் ஆகிய பகுதிகளிலேயே நாடாளுமன்ற உறுப்பினரால் இவ்வாறு மக்கள் குறைகேள் சந்திப்புக்களை நடாத்தியுள்ளார்.

அந்தவகையில் வள்ளுவர்புரம் பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதி மக்கள் சந்தையாகப் பயன்படுத்திவந்த கட்டடத் தொகுதியை விசுவமடு கூட்டுறவுப் பகுதியினர் அபகரித்து வைத்துள்ளனர் என்று இதன்போது அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு சந்தைக் கட்டடம் அபகரிக்கப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் தமது உள்ளூர் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இத்தோடு பாடசாலைக்கான தேவைகள், பாடசாலை மைதானச் சீரமைப்பு, கமநல வங்கியால் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா விவசாயக் கடனை அதிகரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளும் மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டன.

அத்தோடு இளங்கோபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில் மிகமுக்கியமாக இளங்கோபுரம் கிராமத்தை தனி கிராம அலுவலர் பிரிவாக்குதல், வனவளத் திணைக்களத்தின் பிடியிலுள்ள காணியை விடுவித்தல், யானைவேலி அமைத்தல், நஞ்சுண்டான் குளத்தைச் சீரமைத்தல் கிராமத்தின் நடுவே உள்ள காட்டைத் துப்பரவு செய்தல், பொதுநோக்குமண்டபம் அமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கையாக முன்வைக்கப்பட்டன.

அதேவேளை, பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில், பாரதிபுரம் கிராமத்திலுள்ள 350 குடும்பங்குக்கு மேற்பட்டோர் பயன்படுத்தும் பாரதிபுரத்தையும், மாணிக்கபுரத்தையும் இணைக்கும் சுமார் 2.5கிலோ மீற்றர் தூரமான மஞ்சள் பால வீதியையும், மஞ்சள் பாலத்தையும் சீரமைத்தல் உள்ளிட்ட விடயங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

மூங்கிலாறு பகுதியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சந்திப்பில், குறித்த பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரித்துக்



காணப்படுவதாகவும், அதிலும் குறிப்பாக கால் நடைத்திருட்டுக்கள் அதிகரித்துக்காணப்படுதாகவும் இத்தகைய திருட்டுக்களை கட்டுப்படுத்துமாறும் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு சட்டவிரோத மரக்கடத்தல், மணல் கடத்தல் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தல், மூங்கிலாறு வைத்திய சாலையில் காணப்படும் வைத்தியர், தாதியர் வெற்றிடங்களை பூர்த்திசெய்தல், மானிய உரத்துக்கான பணம் வழங்கப் படாமை, உடையார்கட்டு விவசாய போதனாசிரியர் தனது கடமைகளை முறையாகச் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு, கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளும் குறைபாடுகளும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் இதன்போது மூங்கிலாறு பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டன.

வெள்ளப்பள்ளம் பகுதியில் இடம்பெற்ற குறைகேள் சந்திப்பில் அதிகரித்துள்ள கசிப்புஉற்பத்தி மற்றும் போதைப்பொருள் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், வீதிவிளக்குகளை அமைத்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்களால் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரால் மக்கள்குறைகேள் சந்திப்புக்கள் நடாத்திய அனைத்துக் கிராமங்களிலும் உள்ளக வீதிகளையும், பாலங்களையும் சீரமைத்துத் தருமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வீதிகளையும் நேரடியாக மக்களோடு இணைந்தும் பார்வையிட்டிருந்தார்.

இந்த நிலையில் மக்களின் குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கிராம மக்களிடம் மகஜர்களையும் பெற்றுக்கொண்டதுடன், மக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பில் கூடிய கவனத் செலுத்துவார் என்று தெரிவித்திருந்தார்.

# 2026 சட்டப்பேரவை தேர்தல் வியூகம் தொடர்பாக நடிகர் விஜய்யுடன் பிரசாந்த் கிஷோர் திடீர் சந்திப்பு

2026 சட்டப்பேரவை தேர்தல் வியூகம் தொடர்பாக த.வெ.க. தலைவர் விஜய், தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோருடன் ஆலோசனை நடத்தியுள்ளார். இது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை வெற்றி இலக்காக வைத்து தமிழக அரசியலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி பணியாற்றி வருகிறது. அக்கட்சியின் தேர்தல் வியூக பணிகளை ஜான் ஆரோக்கியசாமி கவனித்து வருகிறார். கட்சியில் புதிதாக இணைந்த ஆதவ் அர்ஜுனாவுக்கு பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, தி.மு.கவுக்கு தேர்தல் வியூகம் வகுத்த குழுவில் ஆதவ் அர்ஜுனா பணியாற்றிய அனுபவம் உள்ள நிலையில், தற்போது த.வெ.க கட்சிக்கும் தேர்தல் வியூகம் வகுத்து கொடுக்கும் பணியிலும் மும்முரம் காட்டி வருகிறார்.

இதற்கிடையில், பிரபல தேர்தல் வியூக வகுப்பாளரான பிரசாந்த் கிஷோர் - விஜய் இடையிலான நேரடி சந்திப்புக்கு ஆதவ் அர்ஜுனா சில நாள்களாக தீவிர முயற்சி மேற்கொண்டார் என கூறப்படுகிறது.

இந்நிலையில், சென்னை கிழக்கு கடற்கரை சாலை, நீலாங்கரையில் உள்ள விஜய்யின் வீட்டில், அவரை



பிரசாந்த் கிஷோர் நேற்று திடீரென சந்தித்து ஆலோசனையில் ஈடுபட்டார். ஜான் ஆரோக்கிய சாமி, ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோரும் உடன் இருந்தனர்.

ஏற்கெனவே, த.வெ.கவின் தலைமையை ஏற்கும் கட்சிகளுடன் மட்டுமே கூட்டணி என விஜய் கூறியுள்ள நிலையில், த.வெ.கவின் கூட்டணி தொடர்பான வியூகங்களை வகுத்து கொடுப்பது தொடர்பான விஷயங்கள் இந்த சந்திப்பில் முக்கியமாக ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

தொடர்ந்து, சுமார் இரண்டரை மணிநேரம் நடைபெற்ற இந்த சந்திப்பில் யாருடன் கூட்டணி வைத்தால் வெற்றி பெறலாம், எந்த மாதிரியான வியூகங்களை வகுக்கலாம், எது போன்ற பிரச்சாரத்தை முன்னெடுக்கலாம், எந்த பிரச்சினையை கையில் எடுக்கலாம், எதுபோன்ற விஷயங்களுக்கு களத்தில் இறங்கி போராடலாம், அடுத்தமாதம் தொடங்க இருக்கும் சுற்றுப்பயணத்தில் எதை முன்னிருத்தி எங்கிருந்து பிரச்சாரத்தை தொடங்கலாம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் ஆலோசித்துள்ளனர். பின்னர் விஜய்யும், பிரசாத் கிஷோரும் தனியாக சிறிது நேரம் ஆலோசித்துள்ளனர்.

பிரசாந்த் கிஷோர் ஏற்கெனவே தி.மு.க.வுக்கு வியூகங்களை வகுத்து கொடுத்து தி.மு.கவின் வெற்றிக்கு பங்காற்றியுள்ளார். மேலும் தேசிய அளவில் பாஜக, திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகளுக்கு தனது ஐபேக் நிறுவனம் மூலம் வியூகம் வகுத்து கொடுத்து வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். இந்நிலையில், 2026 சட்டப்பேரவை தேர்தலுக்காக வியூகங்களை வகுக்க அ.தி.மு.க. சார்பில் பிரசாத் கிஷோரை பேசி முடித்திருப்பதாக கூறப்படும் நிலையில், விஜய், பிரசாந்த் கிஷோர் இடையிலான சந்திப்பு, முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

அதேநேரம், தேசிய அளவில் வியூகம் அமைப்பதில் வல்லவர் என பெயர் பெற்ற பிரசாந்த் கிஷோர், 2026 சட்டப்பேரவை தேர்தலில், த.வெ. கவுக்காக முழுநேர தேர்தல் பணிகளை மேற்கொள்வாரா அல்லது ஒரு சில ஆலோசனைகளை மட்டும் வழங்குவாரா என போகப்போக தான் தெரியும் என த.வெ.கவினர் தெரிவித்தனர். இருப்பினும், விஜய்யுடன் முன்னணி தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரின் திடீர் சந்திப்பு அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.



# மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தாததால் 14 கோடி ஏழைகள் பாதிப்பு: சோனியா காந்தி

"நாட்டில் சுமார் 14 கோடி மக்கள் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெற முடியாமல் தவித்து வருகின்றனர். எனவே மக்கள் தொகை கணக்கெடுப்பை அரசு விரைந்து முடிக்க வேண்டும்."

- இவ்வாறு காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி வலியுறுத்தினார்.

மாநிலங்களவையில் நேற்று உரையாற்றிய சோனியா காந்தி,

"காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போது 2013 செப்டம்பரில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்பட்டது. நாட்டின் 140 கோடி மக்களுக்கும் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு முக்கிய முயற்சி இது.

இந்த சட்டத்தின் கீழ், கிராமப்புற மக்களில் 75 சதவீதம் வரையிலும், நகர்ப்புற மக்களில் 50 சதவீதம் வரையிலும் மானிய விலையில் உணவு தானியங்களை பொது விநியோக முறையின் கீழ் பெற்று வருகிறார்கள். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 81.35 கோடி பேர் இந்த சட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகிறார்கள்.

2021 மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாததால், 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பே இன்னமும் பின்பற்றப்படுகிறது. பயனாளிகளுக்கான ஒதுக்கீடு 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதால், சுமார் 14 கோடி மக்கள் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சலுகைகளைப் பெற முடியாமல் தவித்து வருகின்றனர்." - என்றார்.



# வன்முறைகளை சமாளிப்பதற்கு பங்களாதேஷில் கூட்டு நடவடிக்கை

பங்களாதேஷ் பாதுகாப்புப் படையினர் நாடு தழுவிய கூட்டுப் படை நடவடிக்கையின் கீழ் 1,300 நபர்களை கைது செய்துள்ளனர்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் குடும்பத்தினர் மற்றும் அவரது அவாமி லீக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடன் தொடர்புடைய சொத்துக்கள் மீதான வன்முறைத் தாக்குதல்களின் அலையைத் தொடர்ந்து, தலைமை ஆலோசகர் முஹம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசாங்கத்தால் 'ஒபரேஷன் டெவில் ஹன்ட்' எனப் பெயரிடப்பட்ட நாடு தழுவிய நடவடிக்கை தொடங்கப்பட்டது.

முஹம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு கடந்த வெள்ளிக்கிழமை இரவு காசிபூர் மாவட்டத்தில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய பின்னர் சனிக்கிழமையன்று இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

காசிபூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்முறை வெடித்தது.

அமைதியின்மை நாடு முழுவதும் வேகமாக பரவியது, கும்பல் அவாமி லீக்கின் சின்னங்களை குறிவைத்து, அரசியல் பிரிவுகளுக்கு இடையே பதட்டங்களை மேலும் அதிகரித்தது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கூட்டுப் படைகளில் இராணுவ வீரர்கள், பொலிஸ் மற்றும் சிறப்புப் பிரிவுகளும் அடங்குகின்றன.

கடந்த நான்கு நாள்களாக நிலவும் அமைதியின்மை மற்றும் வன்முறை தொடர்பாக 1,300 பேரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

தலைநகர் டாக்காவில் அமைந்துள்ள பங்களாதேஷின் நிறுவனர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் வரலாற்று இல்லத்திற்கு எதிர்ப்பாளர்கள் தீ வைதைமை வன்முறையின் மிகவும் ஆபத்தான சம்பவமாக பதினாது.

ரஹ்மான் 1971 இல் பாகிஸ்தானில் இருந்து வங்காளதேசத்தின் சுதந்திரத்தை அறிவித்ததால், இந்த இல்லம் மிகப்பெரிய தேசிய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

அதிகரித்து வரும் அமைதியின்மைக்கு பதிலளிக்கும் விதமாக, 'ஒபரேஷன் டெவில் ஹன்ட்' செயல்படுத்துவதை கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் ஒரு கட்டளை மையம் நிறுவப்பட்டுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்க கூடுதல் முயற்சிகளுடன், நடவடிக்கை முழு வீச்சில் இருப்பதாக தலைமை ஆலோசகர் அலுவலகம் உறுதிப்படுத்தியது.

# மெக்சிகோ வளைகுடா அமெரிக்க வளைகுடாவானது

## பெயர் மாற்றி உத்தரவிட்டார் ட்ரம்ப்

மெக்சிகோ வளைகுடாவை அமெரிக்க வளைகுடா என பெயர் மாற்றி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி புளோரிடா மாகாணத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், "விரைவில் ஒரு மாற்றத்தை அறிவிக்க உள்ளோம். மெக்சிகோ வளைகுடாவின் பெயரை அமெரிக்க வளைகுடா என மாற்றப்போகிறோம். ஏனென்றால் அது எங்களுடையது. அமெரிக்க வளைகுடா ஒரு அழகான பெயர். அது மிகச்சரியாக உள்ளது" என்று அறிவித்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.




இந்நிலையில், தற்போது மெக்சிகோ வளைகுடாவை, அமெரிக்க வளைகுடா என பெயரை மாற்றம் செய்யும் உத்தரவில் ட்ரம்ப் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளார்.

மெக்சிகோவில் நடைபெறவுள்ள உதைபந்து போட்டியை காண விமானத்தில் பறந்துகொண்டிருந்தபோது, இந்தப் பெயர் மாற்றத்துக்கான உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார். மேலும், பெப்ரவரி 9 ஆம் திகதியை அமெரிக்க வளைகுடா நாள் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அந்த உத்தரவில்,

"மெக்சிகோ வளைகுடா என முன்னர் அறிவிக்கப்பட்ட பகுதி நீண்ட காலமாக வளர்ந்து வரும் நமது தேசத்தின் ஒருங்கிணைந்த சொத்தாக இருந்து வந்தது. அமெரிக்காவின் அழிக்க முடியாத பகுதியாக மெக்சிகோ இருந்து வருவதாக கூறப்பட்டுள்ளதால் இந்த நடவடிக்கையை மேற்கொண்டேன். அமெரிக்காவின் மகத்துவமான வரலாற்றில் அதன் பெருமையை மீட்டெடுத்துள்ளோம்" என்று கூறியுள்ளார்.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 11/02/2025

## கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் தொலைபேசி ஊடாக பண மோசடி

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் தொலைபேசி ஊடாக பாரியளவு பண மோசடி இடம்பெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதியவர் 02▶



# கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பதற்கு தீவிர ஆர்வமாக உள்ளேன்: ட்ரம்ப் அறிவிப்பு

**கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக மாற்றவேண்டும் என்பது குறித்து தான் தீவிர ஆர்வம் கொண்டுள்ளேன் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

**கனடாவை அமெரிக்காவை இணைப்பது குறித்து அவர் தெரிவித்துவரும் விடயங்கள் உண்மையா என்ற பொக்ஸ் நியுஸ் செய்தியாளரின் கேள்விக்கு ஆம் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

நாங்கள் வருடாந்தம் 200 பில்லியன்டொலரை கனடாவிடம் இழக்கின்றோம் என தெரிவித்துள்ள ட்ரம்ப் அது தொடர்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உண்மையாகவே கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கவிரும்புகின்றார் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வர்த்தக சமூகத்தினர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

கனடாவை அமெரிக்காவுடன் இணைக்கும் ட்ரம்பின் ஆசை உண்மையானது என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

எங்கள் நாட்டை கைப்பற்றி அமெரிக்காவுடன் இணைப்பது இலகுவான விடயம் என ட்ரம்ப் எண்ணுகின்றார் என ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

ஒலிவாங்கி செயற்பட்டுக்கொண்டிருந்ததை அறியாமல் கனடா பிரதமர் இதனை தெரிவித்தார் பின்னர் ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது என கனடா ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ட்ரம்ப் கனடாவின் கனிமவளங்கள் மீது கண்வைத்துள்ளார். அவர்களிற்கு எங்கள் வளங்களை பற்றி தெரியும் எங்களிடம் என்ன உள்ளது என்பது தெரியும் இதன் காரணமாகவே அவர்கள் எங்களை தங்களுடன் இணைந்து 51 ஆவது மாநிலமாக மாற்றுவது குறித்து பேசுகின்றனர் என தெரிவித்துள்ளார்.

# பெண்களை காதலில் சிக்க வைத்து மோசடி செய்தவரை தேடும் பொலிஸ்

கனடாவில் பெண்களை காதல் வலையில் சிக்க வைத்து மோசடி செய்த நபர் ஒருவரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

மேற்படி நபர் பெண்களை காதலிப்பதாக பாசாங்கு செய்து அவர்களிடமிருந்து பெரும் தொகை பணத்தை மோசடி செய்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் இந்த மோசடிகள் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சமூக ஊடகங்களை பயன்படுத்தி இந்த மோசடிகள் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் சுமார் 275,000 டொலர்களை மோசடி செய்துள்ளார் என



தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் குறித்த வழக்கு விசாரணைகள் கடந்த வாரம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மேற்படி நபர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

எனவே அந்த நபரை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். நட்பாக பழகி கடனாக பணம் பெற்றுக் கொண்டு மக்களை ஏமாற்றியுள்ளதாக இந்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஆல்பர்ட்டா, சஸ்கெட்ச்வான், ஒன்றாரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களில் இந்த நபர் மோசடிகளில் ஈடுபட்டு பலரை ஏமாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

30 வயதான சுக்குவா வில்லியம்ஸ் என்ற நபரை இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபருக்கு எதிராக 23 குற்றச்சாட்டுகள் சுமத்தி வழக்கு தொடரப்பட்டுள்ளது.



# கனடாவில் வேலைவாய்ப்பு அதிகரிப்பு; ஜனவரியில் 76,000 வேலைவாய்ப்புகள்

கனடாவின் தற்போது வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவும் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 76,000 வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன

இதனால், கனடாவில் வேலையின்மை விகிதம் எதிர்பாராத விதமாக சரிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கடந்த ஜனவரி மாதம் வேலையின்மை விகிதம் 6.6 சதவிகிதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அதற்கு முந்தைய மாதத்தில் 6.7 சதவிகிதம் என பதிவாகியிருந்தது.

கடந்த டிசம்பரில் இந்த எண்ணிக்கை 91,000 என இருந்தாலும், தற்போதைய நெருக்கடியான சூழலில் 76,000 வேலைவாய்ப்புகள் என்பது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றே கூறப்படுகிறது.

மேலும் கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களுக்கான வேலைவாய்ப்பு 1.1 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரிவில் வேலையின்மை விகிதம் 14.2 சதவிகிதத்தில் இலிருந்து 13.6 சதவிகிதமாகக் குறைந்தது.

நிரந்தர ஊழியர்களுக்கான சராசரி மணிநேர ஊதிய வளர்ச்சி 3.7 சதவிகிதமாக இருந்தது. இது டிசம்பரில் திருத்தப்பட்ட 3.8 சதவிகிதத்தில் இருந்து சற்று குறை




வாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கனடாவில் புதிய குடியேற்ற திட்டங்கள் மூலம் பிறநாட்டினருக்கு நிரந்தர குடியுரிமையுடன் வேலை கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் அந்நாட்டின் குடியேற்றம் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லர் புதிய திட்டங்களை அறிவித்துள்ளார்.

திறமையான தொழிலாளர்களை நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளுக்கு ஈர்ப்பதற்காக கறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.






## கனடாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏமாற்றியே இந்த பண மோசடிகள் இடம்பெற்று வருவதாக யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோசடியில் ஈடுபடுபவர்கள் தங்களது பேரப்பிள்ளைகள் போன்று பேசி தங்களுக்கு ஆபத்து எனக் கூறி முதியவர்கள் ஏமாற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு ஆரம்பம் முதல் இது வரையில் இடம்பெற்ற மோசடிகளினால் 19,000 டொலர்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்நிலையில், தொலைபேசி வழியாகவே அதிகளவான மோசடிகள் இடம்பெற்று வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கனடா இறக்குமதி பொருள்களுக்கு கூடுதல் வரி விதிப்பு: ட்ரம்ப் அறிவிப்பு




அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் ஸ்டீல் மற்றும் அலுமினியம் மீது 25 சதவிகித வரி விதிக்க இருப்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பொன்றை வெளியிடவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், கனடா, மெக்சிகோ உட்பட பல நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரி விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதும், கனடா மற்றும் மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது 25 சதவிகித வரி விதிக்க இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, 30 நாள்களுக்கு வரிவிதிப்பைத் தள்ளிவைப்பதாக அவர் அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், தற்போது மீண்டும் கனடா மற்றும் மெக்சிகோ உட்பட எந்தெந்த நாடுகளிலிருந்தெல்லாம் ஸ்டீல் மற்றும் அலுமியம் இறக்குமதி செய்யப்படுகிறதோ அந்த நாடுகள் மீதெல்லாம் 25 சதவிகித வரி விதிக்கப்போவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அறிவிப்பு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், கனேடிய ஸ்டீல் தயாரிப்பாளர்கள் கூட்டமைப்பின் தலைவரான கேத்தரின், ட்ரம்ப் கூறுவது போல் வரிவிதிக்கப்படுமானால் அது அழிவுகரமான விடயமாக அமைவதுடன், இரண்டு நாடுகளுக்கும் சவாலான விடயமாகவும் அமையும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, இந்த வரிவிதிப்பிலிருந்து கனடா வரிவிதிப்பு கோர வேண்டும் என்று கூறியுள்ள அவர், அப்படி கனடாவுக்கு விலக்கு அளிக்கப்படவில்லையானால் பழிக்குப் பழியாக அமெரிக்காவுக்கு வரிகள் மூலம் கனடா பலமாக பதிலடி கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.




# ஒன்ராறியோவில் குறைந்தபட்ச சம்பளம் 17.82 கனேடிய டொலர்களாக அதிகரிப்பு

கனடா ஒன்ராறியோவில் ஒரு மணி நேரத்திற்கான குறைந்தபட்ச சம்பளம் 17.82 கனேடிய டொலர்களாக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடப்படையில், ஒக்டோபர் முதலாம் திகதி 2024 நிலவரப்படி, ஒன்ராறியோவின் ஒரு மணி நேரத்திற்க்கான குறைந்தபட்ச ஊழியர் சம்பளம் 17.20 ஆக இருந்தது.

கனடாவில் நிலவும் பணவீக்கம் மற்றும் பொருளாதாரப் போக்குகளுக்கு ஏற்ப ஊழியர் சம்பளத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் இந்த சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு, ஒன்ராறியோவில் உள்ள மதுபானசாலை ஊழியர்களின் சம்பளம் வேறுப்பட்டதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒன்ராறியோவில் உள்ள தொழில் புரியும் மாணவர்களுக்கான குறைந்தபட்ச ஒரு மணிநேர ஊதியம் 16.20 கனேடிய டொலர்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.